செ.வெ.எண்.06 நாள்: 04.11.2020

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 5 மாற்றுத்திறனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகனங்களையும், தேசிய பள்ளிகள் விளையாட்டு கூட்டமைப்பு போட்டியில் பதக்கம் வென்ற 11 நபர்களுக்கு ரூ.17 லட்சம் மதிப்பிலான காசோலைகளையும் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் வழங்கினார்.**

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் தேசிய பள்ளிகள் விளையாட்டு கூட்டமைப்பு போட்டியில் பதக்கம் வென்ற 11 நபர்களுக்கு ரூ.17 லட்சம் மதிப்பிலான காசோலைகளையும் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (04.11.2020) நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் கலந்துகொண்டு, 5 மாற்றுத்திறனாளிகளுக்கு 3 சக்கர வாகனங்களை வழங்கினார். மேலும், தூத்துக்குடி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக 2018-2019ம் ஆண்டுக்கான 64வது தேசிய பள்ளிகள் விளையாட்டு கூட்டமைப்பு நடத்திய விளையாட்டு போட்டிகளில் பதக்கம் பெற்ற 11 நபர்களுக்கு ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கினார். நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.பி.சண்முகநாதன் (ஸ்ரீவைகுண்டம்), திரு.சின்னப்பன் (விளாத்திக்குளம்) ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

பின்னர் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழக அரசு மிக சிறப்பான திட்டமான அம்மா இருசக்கர வாகன திட்டத்தினை நமது மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் 5 பேருக்கு இன்றைக்க அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. அதில் சிறப்பு அம்சம் என்னவென்றால் அம்மா இருசக்கர வாகன திட்டத்தில் 50 சதவீத மானியத்தொகை அரசே அவர்களுக்கு வழங்கி வருகிறது. மீதமுள்ள அந்த 50 சதவீத தொகையையும் பெறுநிறுவனங்களின் சமூக பொறுப்பு நிதியின் மூலமாக மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது. எனவே 100 சதவீதம் மானியத்தோடு விலையில்லாமல் அம்மா இருசக்கர வாகனம் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்வோடு தெரிவித்து கொள்கிறேன்.

மேலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலமாக 2018-2019ஆம் ஆண்டுக்கான 64வது தேசிய பள்ளிகள் விளையாட்டு கூட்டமைப்பு நடத்திய விளையாட்டு போட்டிகளில் அகில இந்திய அளவிலே ஸ்குவாஸ், செஸ், வெயிட் லிப்டிங், பால் பேட்மிட்டன், பீச் வாலிபால், சைக்கிளிங் உள்ளிட்ட விளையாட்டுகளில் தமிழ்நாட்டின் சார்பாக கலந்துகொண்டு தங்கம், வெள்ளி மற்றும் வெங்கலம் பதக்கம் வென்ற நமது மாவட்டத்தை சேர்ந்த விளையாட்டு வீரர்கள் 11 பேருக்கு மாண்புமிகு

தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த உயரிய ஊக்கத்தொகையான தங்கப்பதக்கம் வென்றவர்களுக்கு இரண்டு லட்சம் ரூபாய், வெள்ளிப்பதக்கத்திற்கு ஒன்றரை லட்சம் ரூபாய், வெங்கலப்பதக்கத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் என மொத்தம் ரூ.17 லட்சம் பரிசுத்தொகை அரசு சார்பாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், அந்த வீரர்கள் இந்திய அளவிலே சென்று நமது மாவட்டத்திற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திரு.விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் திரு.மோகன், மகளிர் திட்டம் திட்ட அலுவலர் திருமதி.ரேவதி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ஞானகௌரி, மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.தியோர்தாஸ், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.சுதாகர், முக்கிய பிரமுகர்கள் திரு.ஆறுமுகநயினார், திரு.திருப்பாற்கடல் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.